# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## June 6, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. சீன அதிபர் ஷி ஜின்பிங், வரும் திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமை ஆகிய இரண்டு நாள்கள் வட கொரியாவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்ளவிருப்பதாக இருநாடுகளும் இணைந்து அதிகாரபூர்வமாக அறிவித்தன.

(i) வட கொரிய அதிபர் கிம் ஜோங் உன் விடுத்த அழைப்பை யேற்று, கடந்த 2019-க்குப் பிறகு, சுமார் 7 ஆண்டுகள் கழித்து ஷி ஜின்பிங் வடகொரியாவுக்குப் பயணிப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

(iii) மேலும், அண்மையில் பெய்ஜிங் நகரில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் ஆகியோரைச் சந்தித்து ஆலோசனை நடத்திய சில வாரங்களிலேயே, ஷி ஜின்பிங்கின் இப்பயணம் அமைந்துள்ளது.

(iv) சர்வதேச அளவில் மற்ற நாடுகளிடமிருந்து தனித்து காணப்படும் வட கொரியா, கம்யூனிஸ்ட் நாடுகளான ரஷியா மற்றும் சீனாவிடம் மட்டும் தொடர்ந்து நெருக்கமான நட்புறவைப் பேணி வருகிறது.

2. சர்வதேச விண்வெளி நிலையத்தில் (ஐஎஸ் எஸ்) ரஷியாவின் பகுதியில் நிலவி வரும் காற்று கசிவு, திடீரென அதிகரித்ததால், அங்குள்ள 5 விண்வெளிவீரர்களைப் பாதுகாப்பான வெளியேற்றத்துக்கு நாசா தயார்படுத்தியது.

(i) விண்வெளி நிலையத்தில் கடந்த சில மாதங்களாக நீடிக்கும் இந்தக் காற்று கசிவின் அளவு, ஒரு நாளைக்கு ஒரு பவுண்ட் என்ற அளவில் இருந்து 2 பவுண்டாக உயர்ந்தது. இதையடுத்து, விண்வெளி நிலையத்தில் தங்கியுள்ள நாசாவின் 'க்ரூ-12 விண்வெளி வீரர்கள் 4 பேர் மற்றொரு அமெரிக்க விண்வெளி வீரர் என மொத்தம் 5 பேர், அவசர தேவைக்காக விண்வெளி நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ள 'ஸ்பேஸ்-எக்ஸ்-இன் 'க்ரூடிராகன்' விண்கலத்துக்குள் நுழைய அறிவுறுத்தப்பட்டனர். அசம்பாவிதம் தவிர்க்க, வீரர்கள் தங்களின் விண்வெளி உடைகளை அணிந்து தயார் நிலையில் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

(ii) இதனிடையே, காற்று கசிவைக் கட்டுப்படுத்த ரஷிய விண்வெளி வீரர்கள் பழுதுபார்க்கும் பணியில் ஈடுபட்டனர். இருப்பினும், முன்னெச்சரிக்கையாக, நாசா இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டது. சுமார் 2 மணிநேரத்துக்குப் பிறகு, கசிவு விகிதத்தை ஆய்வு செய்த நாசா, விண்வெளி வீரர்கள் மீண்டும் விண்வெளி நிலையத்துக்குத் திரும்ப அனுமதியளித்தது.

(iii) விண்வெளி நிலையத்தின் 27 ஆண்டுகால வரலாற்றில் இது வரை வீரர்கள் யாரும் முழுமையாக வெளியேற்றப்பட்டதில்லை என்றாலும்,சில தொழில்நுட்பசிக் கல்கள் காரணமாக அவ்வப்போது இத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது வழக்கம். தற்போது அந்த நிலையத்தில் மொத்தம் 7 விண்வெளி வீரர்கள் தங்கியிருந்து, ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

3. கியூபாவின் அதிபர் மிகெல் டியாஸ் கானெல் மற்றும் அந்நாட்டின் பாதுகாப்பு

அமைச்சகம் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

(i) கியூபாவின் கம்யூனிஸ்ட் தலைவர்கள் மீதான அழுத்தத்தை அதிகரிக்கும் முயற்சியாக, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கையொப்பமிட்ட நிர்வாக உத்தரவின் அடிப்படையில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க கருவூலத் துறை தெரிவித்துள்ளது.

(ii) இத்தடைகளின்கீழ், அதிபர் மிகெல் டீயாஸ் கானெலின் மனைவி லிஸ்குவெஸ்டாபெராசா, முன்னாள் அதிபர் ரௌல் காஸ்ட்ரோவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என மொத்தம் 5 பேர் மற்றும் நாட்டின் பாதுகாப்பு அமைச்சகம் உள்பட 5 முக்கிய அமைப்புகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

(iii) அமெரிக் காவின் இந் நடவடிக்கையை கியூபா வெளியுறவு அமைச்சர் புருனோ ரோட்ரிகஸ் கடுமையாக விமர்சித்தார்.இது அமெரிக்காவின் தலையீட்டுக் கொள்கைக்குச் சான்றாகும் என்றும், இரு நாடுகளுக்கும் இடையே மோதலை உருவாக்கும் இத்தகைய முயற்சிகள் தோல்வியில் முடிவடையும் என்றும் அவர் சமூக ஊடகத்தில் தெரிவித்தார்.

(iv) அமெரிக்காவின் தடையால், தற்போது கியூபா கடும் மின்சாரத் தட்டுப்பாட்டிலும், பொருளாதார நெருக்கடியிலும் சிக்கித் தவிக்கிறது. இந்நிலையில் வெனிசுலா விவகாரத்தைப் போல, கியூப தலைவர்களை முடக்கும் நடவடிக்கைகளை அமெரிக்கா தீவிரப்படுத்தியுள்ளது. ஏற்கெனவே கடந்த மாதம் 11 கியூப அதிகாரிகள் மீது தடைகள் விதிக்கப்பட்டன.

4. குஜராத் மாநிலம், சூரத்தில் 'ஜோராவர்' பீரங்கி வாகனங்கள் மற்றும் பிற பாதுகாப்புத் தளவாடங்கள் உற்பத்தி செய்யும் எல் அண்ட் டி நிறுவன ஆலை வளாகத்தை பிரதமர் மோடி நேரில் பார்வையிட்டார்.

(i) ஏ.எம்.நாயக் கனரக பொறியியல் வளாகம் எனும் இந்த அதிநவீன ஆலையில், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்புடன் (டிஆர்டிஓ) இணைந்து வடிவமைக்கப்பட்ட 'ஜோராவர்' பீரங்கி வாகனம் மற்றும் பிற பாதுகாப்பு தளவாங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன .

(ii) பெரும்பாலும் சீன எல்லையில் பயன்படுத்துவதற்காக, வான்வழியாக கொண்டு செல்லும் வகையிலான இந்த பீரங்கி வாகனங்கள் சுமார் 25 டன் எடை கொண்டவையாகும்.

5. இந்தியாவுக்கு ரஷியாவின் ஐந்தாம் தலைமுறை சுகோய் எஸ்யு-57 போர் விமானங்களை வழங்கத் தயாராக இருப்பதாக அந்நாட்டு அதிபர் விளாதிமீர் புதின் தெரிவித்தார். மேலும், இரு நாட்டு நட்புறவின் அடையாளமாக அதை இந்தியாவில் ஒருங்கிணைந்து தயாரிக்கவும் ஒப்புதல் அளிப்பதாக அவர் தெரிவித்தார்.

(i) பல ஆண்டுகளாக இந்தியாவின் பாதுகாப்புத் தேவைகளுக்கான சாதனங்கள், போர் விமானங்கள், ஆயுதங்களை விநியோகிக்கும் நம்பிக்கைக்குரிய நாடாக ரஷியா திகழ்ந்து வருகிறது. 2022-இல் உக்ரைன் மீதான ரஷிய படையெடுப்புக்குப் பின் அந்நாட்டில் ஏற்பட்ட விநியோக இடையூறு அழுத்தங்களால் பாதுகாப்புத் தளவாடங்கள் கொள்முதல் கொள்கையை இந்தியா மாற்றியது.

(ii) ஐந்தாம் முறை போர் விமானங்களுக்கான நீண்ட தேடலுக்குப் பிறகு நாட்டின்

மிகப்பெரும் வான் வெளித் திட்டமான நவீன பல்திறன் போர் விமானத் திட்டத்தை (ஏஎம்சிஏ) இந்தியா தொடங்கியது. 2035-க்கு முன்பாக இத்திட்டத்தின்கீழ் தயாரிக்கப்படும் போர் விமானங்கள் இந்திய விமானப் படையில் இணைய மிகக் குறைவான வாய்ப்புகளே உள்ளதால் குறைந்தபட்சம் 2 சுகோய் எஸ்யு-57 போர் விமானங்களை கொள்முதல் செய்ய மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

(iii) 'சுதர்சன் சக்ரா' என்ற உள்நாட்டு வான் பாதுகாப்பு கட்டமைப்பை இந்தியா மேம்படுத்தி வருகிறது. முன்னதாக, ரஷியாவிடம் இருந்து 5 எஸ்-400 வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில் 2018-ஆம் ஆண்டு அக்டோபரில் இந்தியா கையொப்பமிட்டது. அதில் 4 எஸ்-400 அமைப்புகள் இந்தியாவுக்கு விநியோகிக்கப்பட்டன.

(iv) இந்நிலையில், மேலும் 5 எஸ்-400 அமைப்புகளைக் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கடந்த மார்ச் மாதம் கையொப்பமிட்டது. இதன்மூலம் ரஷியாவில் இருந்து ஒட்டுமொத்தமாக 10 எஸ்-400 அமைப்புகளை இந்தியா கொள்முதல் செய்கிறது.

6. அரசு கடன் பத்திரங்கள் மீதான அந்நிய முதலீட்டுக்கு மூலதன ஆதாய வரியிலிருந்து விலக்களிப்பதற்கான அவசர சட்டத்தை மத்திய அரசு அமல்படுத்தியது.

(i) நிகழாண்டு ஏப்ரல் 1-ஆம் தேதிமுதல் இச்சட்டம் அமலுக்கு வருவதாக ஜூன் 5-ஆம் தேதி மத்திய அரசு வெளியிட்ட அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டது. ரூபாயின் மீதான அழுத்தத்தை சமாளிக்க வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கும் நோக்கில் இந்த முடிவை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

(ii) அரசு கடன் பத்திரங்கள் விற்பனை, பரிமாற்றம் அல்லது மாற்றம் செய்வதால் கிடைக்கும் வட்டி வருவாய் மற்றும் மூலதன ஆதாயங்களுக்கு வரி விலக்கு அளிக்க வருமான வரிச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான அவசர சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் அமர்வுகளும் நடைபெறாத நிலையில் அரசமைப்புச் சட்டத்தின் சட்டப் பிரிவு 123-இன்கீழ் குடியரசுத் தலைவரின் அவசர சட்டமியற்றும் அதிகாரம் மூலம் உடனடியாக இது நிறைவேற்றப்பட்டதாக நிதி அமைச்சகத்தின் அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இதுதொடர்பாக அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

- உலகின் முதலீட்டு மையமாக இந்தியாவை வலுப்படுத்தவும், மூலதனச் சந்தையை மேம்படுத்தவும் நீண்டகால அந்நிய முதலீட்டை ஈர்க்க பல்வேறு முன்னெடுப்புகள் எடுக்கப்படுகின்றன. குறிப்பாக, அரசு கடன் பத்திரங்கள் மீதான அந்நிய நிறுவன முதலீடுகளின் (எஃப்பிஐ) பங்களிப்பை அதிகரிக்க முழுமையாக அணுகக்கூடிய வழிமுறைகளின்கீழ் குறிப்பிட்ட பத்திரங்களின் பட்டியலை விரிவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி 15 ஆண்டுகள், 30 ஆண்டுகள் மற்றும் 40 ஆண்டுகள் வரையில் புதிதாக விநியோகிக்கப்படும் அரசு கடன் பத்திரங்களும், இறையாண்மை பசுமைப் பத்திரங்களும் இதில் சேர்க்கப்படும்.
- பொது வழிமுறையின்கீழ் மேற்கொள்ளப்படும் அந்நிய நிறுவன முதலீட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள குறுகிய கால கடன் வரம்பு, செறிவு வரம்பு மற்றும் பத்திர வாரியான வரம்பு ஆகிய மூன்று வரம்புகளும் நீக்கப்படுகின்றன. அதே வேளையில் புழக்கத்தில் உள்ள மத்திய அரசு கடன் பத்திரங்கள் மீதான ஒட்டு

மொத்த முதலீட்டு வரம்பு 6 சதவீதமாகவும், மாநில அரசின் கடன் பத்திரங்கள் மீதான முதலீட்டு வரம்பு 2 சதவீதமாகவும் தக்கவைக்கப்படுகிறது.

- மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் கடன் பத்திரங்கள் மீதான முதலீட்டு வரம்புக்கான 'பொது' மற்றும் 'நீண்ட காலம்' ஆகிய உள்பிரிவுகள் ஒன்றாக சேர்க்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) ரிசர்வ் வங்கி ஒப்புதல்:

- 15 ஆண்டுகள், 30 ஆண்டுகள் மற்றும் 40 ஆண்டுகள் வரையில் முழுமையாக அணுகக்கூடிய வழிமுறைகளின்கீழ் புதிதாக விநியோகிக்கப்படும் அரசு கடன் பத்திரங்கள் மீதான அந்நிய நிறுவன முதலீடுகள் குறித்த நிதி அமைச்சகத்தின் முடிவுக்கு ரிசர்வ் வங்கி ஒப்புதல் அளித்தது. பொது வழிமுறைகளின்கீழ் மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்கான குறுகிய கால கடன் வரம்பு, செறிவு வரம்பு மற்றும் பத்திர வாரியான வரம்பு ஆகிய மூன்று வரம்புகளையும் ரிசர்வ் வங்கி நீக்கியது. இத்துடன் அரசு கடன் பத்திரங்கள் மீதான அந்நிய முதலீட்டுக்கு மூலதன ஆதாய வரியிலிருந்து விலக்களிக்கும் நடவடிக்கையும் ஒன்றிணைவதால் குறைந்த வட்டி விகிதத்தில் அரசு கடன் பெற முடியும்.
- மேலும், கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பு, அந்நிய முதலீடு சரிவு போன்ற காரணங்களால் நிகழாண்டு' தொடக்கம் முதல் 6 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ள ரூபாயின் மதிப்பு மீண்டும் வலுவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

7. இந்தியாவின் 100-ஆவது ராம்சர் தளமாக உத்தர பிரதேசத்தில் உள்ள ஜெயபிரகாஷ் நாராயண் பறவைகள் சரணாலயம் அங்கீகரிக்கப்பட்டதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

(i) ஈரநிலங்களை பாதுகாக்கும் நோக்கில் கடந்த 1971-ஆம் ஆண்டு, ஈரானில் உள்ள ராம்சர் நகரில் நடைபெற்ற மாநாட்டில் சர்வதேச நாடுகள் ஒப்பந்தத்தை மேற்கொண்டன. இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் நாடுகள் ஈரநிலம் என வரையறுக்கப்படும் பகுதிகளின் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த ஒப்பந்தத்தில் 1982, பிப்ரவரி 1-ஆம் தேதி இந்தியா கையொப்பமிட்டது.

(ii) இந்தியாவில் ராம்சர் தளங்களின் எண்ணிக்கை 99-ஆக இருந்த நிலையில் தற்போது 100- ஆக உயர்ந்துள்ளது.

(iii) இதுதொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில், 'இது ராம்சர் தளங்களின் நூற்றாண்டு. உத்தர பிரதேசத்தின் பலியா மாவட்டத்தில் அமைந்துள்ள ஜெயபிரகாஷ் நாராயண் பறவைகள் சரணாலயம் இந்தியாவின் 100-ஆவது ராம்சர் தளமாக அங்கீகரிக்கப்பட்டதில் மகிழ்ச்சி. பல்லுயிர் வளம் மிக்க இந்த சரணாலயம் உள்ளூர் பறவைகள் மட்டுமின்றி வெளிநாட்டுப் பறவைகளையும் ஈர்க்கக் கூடியது.

(iv) அறிவியல், புத்தாக்கம், விழிப்புணர்வு முன்னெடுப்புகள் மூலம் கடந்த சில ஆண்டுகளாக ஈரநிலங்களின் பரப்பை பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகள் மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. அதன் பலனாக ராம்சர் தள அங்கீகாரம் கிடைத்திருப்பது பல்லுயிர் வளம் மற்றும் சூழலியல் சமநிலையைப் பாதுகாக்கவும்

பசுமையான எதிர்காலத்தை கட்டமைப்பதற்கும் பெரிதும் உதவிகரமாக இருக்கும்' என குறிப்பிட்டார்.

(v) உத்தர பிரதேசத்தின் 13-ஆவது ராம்சர் தளமாக ஜெயபிரகாஷ் நாராயண் பறவைகள் சரணாலயம் உருவெடுத்துள்ளது. இதற்கான அங்கீகார சான்றிதழை உலக சுற்றுச்சூழல் தின (ஜூன் 5) நிகழ்ச்சியில் முதல்வர் யோகி ஆதித்யநாத்திடம் வனத்துறை அமைச்சர் அருண்குமார் சக்சேனா வழங்கினார்.

8. இந்தியாவில் உயர் திறன் தரவு மையங்களைக் கட்டமைக்கும் நோக்கில், துறை சார் முன்னணி நிறுவனமான 'ஏர்டிரங்க்' ரூ.3 லட்சம் கோடி முதலீடு செய்யவுள்ளது. இது தொடர்பான அறிவிப்பை, பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார்.

(i) ஆஸ்திரேலியாவைத் தலைமையிடமாக கொண்டு கடந்த 2015-இல் தொடங்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமான ஏர்டிரங்க், ஆசிய-பசிபிக் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உயர் திறன் தரவு மையங்களைக் கட்டமைத்து வருகிறது. லூமினா கிளவுட்இன்ஃபரா நிறுவனத்தை கடந்த ஏப்ரலில் கையகப்படுத்தியதன் மூலம் இந்தியச் சந்தையில் நுழைந்த ஏர்டிரங்க், இங்கு உயர் திறன் தரவு மையங்களின் விரிவாக்கத்தில் கவனம் செலுத்தி வருகிறது.